மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 09 ஆம் நாள் திங்கள்கிழமை
இ.ம.எண்.08/2024
அ.வ.எண்.116/2023

மாது ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. கதிர்வேலு
2. மேற்பார்வை பொறியாளர், TNEB, மேட்டுர், சேலம்.
3. செயற்பொறியாளர், TNEB, மேட்டுர், சேலம்.
4. உதவி மின்பொறியாளர், (இயக்கமும், பராமரிப்பும்)
TNEB, மேட்டுர், சேலம். ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 18.11.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.ராஜேஸ் கண்ணன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.L.கணபதிசுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.S.ஹரிநாராயணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம், கட்டளை 39 விதிகள் 1மற்றும் 2 மற்றும் பிரிவு 151—ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : —

(i) வாதி/மனுதாரரால் தாவா சொத்தில் 1ம் எதிர்மனுதாரர் அத்துமீறி நுழைந்து மனுதாரரின் தடவழிப்பாத்தியத்தை மறுத்ததோடு அழித்த வழித்தடத்தை மீண்டும்

ஏற்படுத்திக் கொடுக்க வேண்டி விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை, செயலுறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் தாவா சொத்திற்கு அருகிலுள்ள இடத்தில் புதிய கிணறு தோண்டி அதற்கு 2 முதல் 4 எதிர்மனுதாரர்களிடம் புதிய மின் இணைப்பு பெறுவதற்கு மனு செய்துள்ளார். அதன்படி 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தின் வழியாக மின் ஒயர்களை இழுத்து 1ம் எதிர்மனுதாரரின் கிணற்றுக்கு மின் இணைப்பு கொடுக்க முயற்சிக்கிறார்கள். மேலும் மின் இணைப்பு கொடுப்பதற்காக மனுதாரரின் நிலத்தின் வழியாக மின் ஒயர்களை கொண்டு சென்றுள்ளனர்.

(ii) மேற்படி அசல் வழக்கினை விளம்புகை, செயலுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர தடையுத்தரவு பரிகாரங்கள் கேட்டு தாக்கல் செய்துள்ளதால் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் இழுத்துள்ள மின் ஒயர்கள் செயலுறுத்துக் கட்டளையை நிறைவேற்ற தடையாக இருக்கும். மேலும் தாவா சொத்தில் மனுதாரருக்கு ச.எண்.883/5Dல் உள்ள பொது கிணற்றில் 1/3 பங்கு பாத்தியமும், மேலும் பொதுக்கிணற்றிலிருந்து மனுதாரரது சொத்துகளுக்கு செல்ல நடைவழி பாத்தியமும், மனுதாரரது சொத்துகளுக்கு பொதுக் கிணற்றிலிருந்து தண்ணீர் பாய்ச்ச உத்தி, வாரி வாய்க்கால் பாத்தியமும் உள்ளது. மேலும் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரர் கிணற்றிற்கு மின் இணைப்பு கொடுப்பதற்காக இழுக்கப்பட்ட மின்சார ஒயர்களுக்கு அடியில் வாய்க்கால் உள்ளது. 1ம் எதிர்மனுதாரர் இந்த வாய்க்காலை ஏர் உழுது அழித்து விட்டதால் அதனை மீண்டும் ஏற்படுத்தி தருவதற்காக மனுதாரர் இவ்வழக்கில் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

(iii) மேலும் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் மின் இணைப்பு கொடுக்க மின்சார ஒயர்களை இழுத்துள்ள பகுதி நீர்வழித்தட பகுதி என்பதால் பின்நாட்களில் மின் கசிவு ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள், 1ம் எதிர்மனுதாரரின் கிணற்றுக்கு மின் இணைப்பு வழங்குவதற்காக தாவா சொத்தின் வழியாக இழுத்த மின் ஒயர்களை நீக்கிவிட்டு 1ம் எதிர்மனுதாரர் சொத்தில் வேறொரு இடத்தை தேர்வு செய்து

அதன் வழியாக மின்சார ஒயர்களை இழுத்து 1ம் எதிர்மனுதாரரின் கிணற்றுக்கு மின் இணைப்பு வழங்க 2 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை உத்தரவு வழங்குமாறு மனுதாரர் கூறியுள்ளார்.

2) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் செல்லதக்கதல்ல. 1ம் எதிர்மனுதாரர் தான் விலைக்கு வாங்கிய ச.எண்.883/5B ல் புதியதாக கிணறு தோண்டி அதற்கு மின் இணைப்பு கேட்டு விண்ணப்பித்து முறைப்படி கம்பங்கள் நடப்பட்டு மின் இணைப்பு ஒயர்கள் கிணற்றின் அருகே உள்ள கம்பத்தில் கட்டப்பட்டு மின் இணைப்பு கொடுக்கும்போது அதை தடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்து கடந்த ஒரு ஆண்டாக மின் இணைப்பு பெறாமல் தடுத்து வருகிறார். ஆணையர் அறிக்கை, வரைபடம் ஆகியவை மனுதாரர் எப்படி எந்தவொரு உரிமையும் இன்றி தாவா தாக்கல் செய்துள்ளார் என்பதை தெளிவுபடுத்தக்கூடிய ஒன்றாகும்.

(ii) ஏற்கனவே மின் ஒயர்கள் இழுக்கப்பட்ட சூழலில் ஆணையர் அறிக்கை, வரைபடத்திற்கு பின் தான் தாக்கல் செய்த இ.ம.எண்.03/2023 ஐ 05.03.2024 ல் வாபஸ் பெற்றுக்கொண்டு மீண்டும் தவறான தகவல்களுடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கே தவறு, சொத்துவிவரம் தவறு என்ற சூழலில் மனுதாரருக்கு எந்த ஒரு பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல. வாய்க்கால் பூமியில் உள்ளது. மின் ஒயர்கள் மேலே கம்பி கட்டி இழுக்கப்பட்ட சூழலில் மின் கசிவு ஏற்படும் என்பது தவறு. 1ம் எதிர்மனுதாரர் புதியதாக கிணறு வெட்டி நல்லமுறையில் விவசாயம் செய்து வருவதை மனுதாரர் இதுபோன்று பல மனுக்களை தாக்கல் செய்து இடையூறு செய்து வருகிறார். ஏற்கனவே பணம் கட்டி கம்பம் வைத்து மின் ஒயர் இழுக்கப்பட்ட சூழலில் வேறு இடம் தேர்வு செய்ய கேட்க மனுதாரருக்கு அருகதை இல்லை. எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) 2 முதல் 4 எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–

(i) மனு பொய்யானதும், மோசடியானதும், சட்டவலிவு அற்றது ஆகும். மேற்படி 1ம் எதிர்மனுதாரருக்கு தாவா சொத்திற்கு அருகிலுள்ள இடத்தில் புதிய கிணறு தோண்டி அதற்கு 2 முதல் 4 எதிர்மனுதாரர்களிடம் புதிய மின் இணைப்பு பெறுவதற்கு மனு செய்துள்ளார் என்றும், அதன்படி 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தின் வழியாக மின் ஒயர்களை இழுத்து 1ம் எதிர்மனுதாரரின் கிணற்றுக்கு மின் இணைப்பு கொடுக்க முயற்சிக்கிறார்கள் என்றும், மேற்படி அசல் வழக்கை மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக விளம்புகை, செயலுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர தடையுத்தரவு பரிகாரங்கள் கேட்டு தாக்கல் செய்துள்ளதால் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் இழுத்துள்ள மின் ஒயர்கள் செயலுறுத்துக் கட்டளையை நிறைவேற்ற தடையாக இருக்கும் என உண்மைக்கு மாறாக பொய்யான சங்கதிகளை கூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

(ii) மனுதாரருக்கு ச.எண்.883/5Dல் உள்ள பொது கிணறு இருப்பதாகவும், அதில் 1/3 பங்கு பாத்தியம் இருப்பதாகவும், இந்த கிணற்றிலிருந்து மனுதாரரது சொத்துகளுக்கு செல்ல நடைவழி பாத்தியம் இருப்பதாகவும், தாவா சொத்துகளுக்கு பொதுக் கிணற்றிலிருந்து தண்ணீர் பாய்ச்ச உத்தி, வாரி வாய்க்கால் பாத்தியமும் உள்ளது எனவும், மேற்படி வாய்க்கால் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள், 1ம் எதிர்மனுதாரர் கிணற்றிற்கு மின் இணைப்பு கொடுப்பதற்காக இழுக்கப்பட்ட மின்சார ஒயர்களுக்கு அடியில் வாய்க்கால் உள்ளது எனவும், அது நீர்வழித்தட பகுதி என்பதால் பின்நாட்களில் மின்கசிவு ஏற்பட வாய்ப்புள்ளது என கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானதாகும். இச்சங்கதிகளை மனுதாரரே தக்க சாட்சி மற்றும் ஆவணங்களை கொண்டு நிரூபிக்க வேண்டும். வழக்கு தாக்கல் செய்தபோது இச்சங்கதிகள் ஏதும் கூறாமல் தற்போது புது சங்கதிகளை இம்மனுவில் சேர்த்து தாக்கல் செய்துள்ளார். இது முன்னுக்கு பின் முரணாக உள்ளது. மேலும் தற்போது மனுதாரர்/வாதி தரப்பு விசாரணை தொடங்கும் நிலையில் தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்கத்தக்கதல்ல. எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்

4) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள், சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

5) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

6) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர் தரப்பில் வாதி/மனுதாரரால் விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை, செயலுறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி பிரதிவாதி/எதிர்மனுதாரர் மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 1ம் எதிர்மனுதாரர் தாவா சொத்திற்கு அருகிலுள்ள இடத்தில் புதிய கிணறு தோண்டி அதற்கு 2 முதல் 4 எதிர்மனுதாரர்களிடம் புதிய மின் இணைப்பு பெறுவதற்கு மனு செய்துள்ளதன்படி 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தின் வழியாக மின் ஒயர்களை இழுத்து 1ம் எதிர்மனுதாரரின் கிணற்றுக்கு மின் இணைப்பு கொடுக்க முயற்சிக்கிறார்கள் என்றும், மேலும் மின் இணைப்பு கொடுப்பதற்காக மனுதாரரின் நிலத்தின் வழியாக மின் ஒயர்களை கொண்டு சென்றுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(ii) மேற்படி அசல் வழக்கினை விளம்புகை, செயலுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர தடையுத்தரவு பரிகாரங்கள் கேட்டு தாக்கல் செய்துள்ளதால் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் இழுத்துள்ள மின் ஒயர்கள் செயலுறுத்துக் கட்டளையை நிறைவேற்ற தடையாக இருக்கும் என்றும், மேலும் தாவா சொத்தில் மனுதாரருக்கு ச.எண்.883/5D ல் உள்ள பொது கிணற்றில் 1/3 பங்கு பாத்தியமும், மேலும் பொதுக்கிணற்றிலிருந்து மனுதாரரது சொத்துகளுக்கு செல்ல நடைவழி பாத்தியமும், மனுதாரரது சொத்துகளுக்கு பொதுக் கிணற்றிலிருந்து தண்ணீர் பாய்ச்ச உத்தி, வாரி வாய்க்கால் பாத்தியமும் உள்ளது என்றும், மேலும் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரர் கிணற்றிற்கு மின்

இணைப்பு கொடுப்பதற்காக இழுக்கப்பட்ட மின்சார ஒயர்களுக்கு அடியில் வாய்க்கால் உள்ளது என்றும், 1ம் எதிர்மனுதாரர் இந்த வாய்க்காலை ஏர் உழுது அழித்து விட்டதால் அதனை மீண்டும் ஏற்படுத்தி தருவதற்காக மனுதாரர் இவ்வழக்கில் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) மேலும் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் மின் இணைப்பு கொடுக்க மின்சார ஒயர்களை இழுத்துள்ள பகுதி நீர்வழித்தட பகுதி என்பதால் பின்நாட்களில் மின் கசிவு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றும், எனவே 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள், 1ம் எதிர்மனுதாரரின் கிணற்றுக்கு மின் இணைப்பு வழங்குவதற்காக தாவா சொத்தின் வழியாக இழுத்த மின் ஒயர்களை நீக்கிவிட்டு 1ம் எதிர்மனுதாரர் சொத்தில் வேறொரு இடத்தை தேர்வு செய்து அதன் வழியாக மின்சார ஒயர்களை இழுத்து 1ம் எதிர்மனுதாரரின் கிணற்றுக்கு மின் இணைப்பு வழங்க 2 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை உத்தரவு வழங்குமாறு மனுதாரர் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iv) அதே சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர் தான் விலைக்கு வாங்கிய ச.எண்.883/5B ல் புதியதாக கிணறு தோண்டி அதற்கு மின் இணைப்பு கேட்டு விண்ணப்பித்து முறைப்படி கம்பங்கள் நடப்பட்டு மின் இணைப்பு ஒயர்கள் கிணற்றின் அருகே உள்ள கம்பத்தில் கட்டப்பட்டு மின் இணைப்பு கொடுக்கும்போது அதை தடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்து கடந்த ஒரு ஆண்டாக மின் இணைப்பு பெறாமல் தடுத்து வருகிறார் என்றும், ஆணையர் அறிக்கை, வரைபடம் ஆகியவை மனுதாரர் எப்படி எந்தவொரு உரிமையும் இன்றி தாவா தாக்கல் செய்துள்ளார் என்பதை தெளிவுபடுத்தக்கூடிய ஒன்று என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(v) 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரருக்கு ச.எண்.883/5D ல் உள்ள பொது கிணறு இருப்பதாகவும், அதில் 1/3 பங்கு பாத்தியம் இருப்பதாகவும், இந்த கிணற்றிலிருந்து மனுதாரரது சொத்துகளுக்கு செல்ல நடைவழி பாத்தியம் இருப்பதாகவும், தாவா சொத்துகளுக்கு பொதுக் கிணற்றிலிருந்து தண்ணீர் பாய்ச்ச

உத்தி, வாரி வாய்க்கால் பாத்தியமும் உள்ளது எனவும், மேற்படி வாய்க்கால் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள், 1ம் எதிர்மனுதாரர் கிணற்றிற்கு மின் இணைப்பு கொடுப்பதற்காக இழுக்கப்பட்ட மின்சார ஒயர்களுக்கு அடியில் வாய்க்கால் உள்ளது எனவும், அது நீர்வழித்தட பகுதி என்பதால் பின்நாட்களில் மின்கசிவு ஏற்பட வாய்ப்புள்ளது என கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றும், இச்சங்கதிகளை மனுதாரரே தக்க சாட்சி மற்றும் ஆவணங்களை கொண்டு நிரூபிக்க வேண்டும் என்றும், வழக்கு தாக்கல் செய்தபோது இச்சங்கதிகள் ஏதும் கூறாமல் தற்போது புது சங்கதிகளை இம்மனுவில் சேர்த்து தாக்கல் செய்துள்ளார் என்றும், இது முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றும், மேலும் தற்போது மனுதாரர்/வாதி தரப்பு விசாரணை தொடங்கும் நிலையில் தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்கத்தக்கதல்ல என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(vi) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், தாவா சொத்தின் வழியாக 1ம் எதிர்மனுதாரரின் நிலத்திற்கு மின் இணைப்பு தருவதற்காக மனு சொத்தின் வழியாக 2 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் மின்சார ஒயர்களை இழுத்து செல்வதால் நீர்வழித்தட பகுதியில் பின்னர் மின்கசிவு ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் அவற்றை நீக்கி, மாற்றுத்தடவழியின் வழியாக கொண்டு செல்ல உத்தரவிடக் கோரி செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதே சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர் தான் விலைக்கு வாங்கிய ச.எண்.883/5B ல் புதியதாக கிணறு தோண்டி அதற்கு மின் இணைப்பு கேட்டு விண்ணப்பித்து முறைப்படி கம்பங்கள் நடப்பட்டு மின் இணைப்பு ஒயர்கள் கிணற்றின் அருகே உள்ள கம்பத்தில் கட்டப்பட்டு மின் இணைப்பு கொடுக்கும்போது அதை தடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்து கடந்த ஒரு ஆண்டாக மின் இணைப்பு பெறாமல் தடுத்து வருகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(vii) இருதரப்பு வாதங்களை கவனமாக பரிசீலனை செய்கையில், இந்நீதிமன்றம் கவனத்தில கொள்ளும் சங்கதி யாதெனில், **“AIR 1997 Mad 64, E.Venkatesan and others**

**vs. The Chairman, TNEB"** என்ற வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால், பத்தி 19 ல்,

> "19. From the above settled position of law, it is clear that when the Electricity Board execises power under Section 51 of the Electricity Act read with Section 10 of the Telegraphs Act, they are not acquiring any land. They are only making use of the land for the purpose of laying electric lines for which full compensation is given for the damage caused. It is also clear there from that no notice is required to the owner before laying the poles or constructing any tower, nor any consent is required from them."

என வகுத்துரைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(viii) மேற்கண்ட சட்டநிலைப்பாட்டை கருத்தில் கொள்கையில், இந்திய தந்திகள் சட்டப் பிரிவு 10 ன் படியும், இந்திய மின்சார சட்டம் பிரிவு 51 ன் படியும் மின்சார வாரியம் ஆனது பட்டா நிலம் வழியாக மின் கம்பம் மற்றும் மின் கம்பி இழுத்துச் செல்லவும் முழு உரிமை உள்ளது என்பதும், பட்டா நிலத்துக்காரர் அதனை ஆட்சேபணை செய்ய இயலாது என்பதும், இது தொடர்பாக அரசாணையை G.O.MS.No.1455 தேதி 06.06.1961 ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. மேற்கண்ட சங்கதிகளை கருத்தில் கொள்கையில், தற்போது மனுதாரர் அசல் வழக்கில் கோரியுள்ள பரிகாரங்களே தகுதிப்பாடுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டியவை எனும் நிலையில், மேற்படி பரிகாரங்களை இடைக்கால மனுவில் தீர்மானிக்க இயலாது என்பது தெரிய வருகிறது.

(ix) இச்சூழ்நிலையில் மனுதாரர் தாவாவில் கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரத்தையே இடைநிலை மனுவிலும் கோரியுள்ளார். மனுதாரரால் தாவாவில் கோரப்பட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், இந்த இடைநிலை மனுவில் கோரப்பட்டுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் ஒரே மாதிரியான தன்மை கொண்டதாகவும், ஒத்த இயல்புடையதாகவும் உள்ளது தெரியவருகிறது. எனவே மேற்படி பிரச்சனைகளையும், அதன் தகுதிப்பாடுகளையும் இடைநிலை மனுவில் தீர்மானிப்பது என்பது ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்துவதற்கு ஒப்பானதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(x) மேலும் இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், தரப்பினர்களது வாதங்களையும் கருத்தில் கொள்கையில், இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரதான பிரச்சனையானது தாவா சொத்தின் பேரிலுள்ள தனது உரிமைமூலத்தை மனுதாரர் நிரூபித்துள்ளாரா? என்பதும், தாவா சொத்தின் சட்டப்படியான சுவாதீன அனுபவத்தில் மனுதாரர் உள்ளாரா? என்பதும், தாவா வழித்தடத்தை மனுதாரர் பயன்படுத்துவதற்கு 1ம் எதிர்மனுதாரர் இடையூறு செய்தாரா? என்பதுமே ஆகும்.

(xi) மேற்படி சங்கதிகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து தரப்பினர்கள் முன் வைக்கும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே அவற்றை தீர்மானிக்க இயலும். மேலும் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது சங்கதி தொடர்புடைய எழுவினாவாக உள்ளது என தெரியவருகிறது. இவ்வழக்கானது பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக தயார் நிலையில் உள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி எழுவினாவை வழக்கு விசாரணையின் பொழுது தரப்பினர்களால் முன்னிலைப்படுத்தப்படும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும் எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xii) மாண்பமை உச்சநீதிமன்றத்தால் "*Anand Prasad Agarwalla /Vs/ Tarkeshwar Prasad & Ors", reported in "2001 (5) SCC 568"* என்ற வழக்கில்,

> *"It may not be appropriate for any Court to hold mini trial at the stage of grant of temporary injunction."*

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டின் அடிப்படையில் மனுதாரரால் காண்பிக்கப்பட்டுள்ள முதல் தோற்ற வழக்கானது இருதரப்பு ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு விசாரணையின் மூலம் தான் தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இச்சூழ்நிலையில் மாண்பமை உச்சநீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் கூறியுள்ளபடி, இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்த வேண்டிய

அவசியமில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 09 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.12.09 16:58:43 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.12.09 16:58:49 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.